(ஒன்பதாவது பாராளுமன்றம் - நான்காவது கூட்டத்தொடர்)

**இல. 92.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

**2023 டிசம்பர் 05, செவ்வாய்க்கிழமை, மு.ப. 9.30 மணிக்கு**

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

1624/2023

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கமத்தொழில் திணைக்களத்தின் கீழுள்ள மரக்கறி விதை விற்பனை நிலையங்களின் மூலமாக விற்பனை செய்யப்படுகின்ற மரக்கறி விதைகள் பற்றிய தகவல்களை துரிதமாகப் பெற்றுக்கொள்வதற்கு கணினிமயப்படுத்தப்பட்ட தகவல் முறைமையொன்று நிறுவப்படவில்லை என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) மரக்கறி விதை உற்பத்தி மற்றும் விநியோகம் தொடர்பான தரவுகளை துரிதமாக வழங்குவதற்கு கணினிமயப்படுத்தப்பட்ட தகவல் முறைமையொன்றை நிறுவுவது அத்தியாவசியமென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iii) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி கணினிமயப்படுத்தப்பட்ட தகவல் முறைமையை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(v) ஆமெனில், அத்திகதி யாதென்பதையும்;

(vi) அவ்வாறான கணினிமயப்படுத்தப்பட்ட தகவல் முறைமையொன்று நிறுவப்படமாட்டாதெனில், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2.

1644/2023

கௌரவ மிலான் ஜயதிலக்க,— கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது வாழைச்சேனை கடதாசி ஆலையில் உற்பத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றனவா என்பதையும்;

(ii) அங்கு உற்பத்தி செய்யப்படும் கடதாசி வகைகள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி உற்பத்தியின் அளவானது உள்நாட்டு கடதாசித் தேவையின் சதவீதமாக எவ்வளவு என்பதையும்;

(iv) மேற்படி ஆலையின் உற்பத்திக் கொள்ளளவை அதிகரிப்பதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3.

1686/2023

கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்,— வனசீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வவுனியா மாவட்டத்தின் வெங்கலச் செட்டிக்குளம் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள விவசாயிகளின் பயிர்களுக்குக் காட்டு யானைகள் மற்றும் குரங்குகள் போன்ற விலங்குகளினால் தொடர்ச்சியாக சேதங்கள் விளைவிக்கப்படுகின்றன என்பதையும்;

(ii) வனசீவராசிகள் திணைக்களத்தினால் இது தொடர்பாக நிரந்தர நடவடிக்கை மேற்கொள்ளப்படாத காரணத்தினால் மேற்படி விவசாயிகள் விவசாய நடவடிக்கைகளிலிருந்து விலகிச் செல்லும் நிலைமை தோன்றியுள்ளது என்பதையும்;

(iii) இது தொடர்பில் 2020.10.20 ஆம் திகதி என்னால் அமைச்சருக்கு அனுப்பப்பட்டுள்ள எழுத்து மூலக் கோரிக்கை சம்பந்தமாக இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) வெங்கலச் செட்டிக்குளம் பிரதேசத்திலுள்ள 17 கிராமங்கள் உள்ளடங்கும் வகையில் யானை வேலி அமைப்பதற்காக பிரதேச செயலகத்தினால் கோரப்பட்டிருந்த ரூபா 368.2 மில்லியனை வழங்காதிருப்பதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்கூறப்பட்ட பயிர்ச்செய்கை நிலங்களை காட்டு யானைகள் மற்றும் குரங்குகள் போன்ற விலங்குகளிடமிருந்து பாதுகாப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4.

1765/2023

கௌரவ சமன்பிரிய ஹேரத்,— கடற்றொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் கீழுள்ள இனப்பெருக்க நிலையங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அவை நிறுவப்பட்டுள்ள பிரதேசங்கள் யாவை என்பதையும்;

(iii) புதிய இனப்பெருக்க நிலையங்களை நிர்மாணிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2015 ஆம் ஆண்டு முதல் இதுவரை நீர்த்தேக்கங்களுக்கு விடுவிக்கப்பட்டுள்ள மீன் குஞ்சுகளின் எண்ணிக்கை ஒவ்வொரு வருட அடிப்படையில் தனித்தனியே யாதென்பதையும்;

(ii) எதிர்காலத்தில் நீர்த்தேக்கங்களுக்கு விடுவிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ள மீன் குஞ்சுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5.

3238/2023

கௌரவ குமாரசிறி ரத்நாயக்க,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) ஊவா மாகாண சபையின் கைத்தொழில் அமைச்சின் கீழ் மொனராகலை மாவட்டத்தில் நடாத்திச் செல்லப்படுகின்ற தச்சுத்தொழில் பயிற்சிப் பாடசாலைகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி பாடசாலைகளில் இன்றளவில் செயற்பாட்டு நிலையிலுள்ள தச்சுத்தொழில் பயிற்சிப் பாடசாலைகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி பயிற்சிப் பாடசாலைகளில் பணியாற்றுகின்ற பணியாளர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு பதவியின் அடிப்படையில் வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2018 ஆம் ஆண்டு தொடக்கம் 2022 ஆம் ஆண்டு வரை, மேற்படி (அ)(i)இல் குறிப்பிடப்பட்ட தச்சுத்தொழில் பயிற்சிப் பாடசாலைகளில் பயிற்சி பெற்றுள்ள பயிற்சியாளர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு வருட அடிப்படையில் வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி பயிற்சியாளர்களில் இன்றளவில் தொழில்களில் ஈடுபடுத்தப்பட்டுள்ள பயிற்சியாளர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iii) தொழில்களில் ஈடுபடுத்தப்படுவதற்கு மேலதிகமாக மேற்படி பயிற்சியாளர் களுக்கு வழங்கப்படும் ஏனைய வசதிகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வுகள் (இல. 1),— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8 இன் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், 2023 திசம்பர் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சபை அமர்வு தினமாக இருக்குமாக.

2.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வுகள் (இல. 2),— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8 இன் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், 2023 திசம்பர் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சபை அமர்வு நேரங்கள் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 12.30 மணி வரையும் பி.ப. 1.00 மணி முதல் பி.ப. 4.30 மணி வரையும் இருக்குமாக. பி.ப. 4.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

3.

கௌரவ சட்டத்தரணி லக்ஷ்மன் கிரிஎல்ல,— சிறப்புரிமை,— தனது சிறப்புரிமைகள் மீறப்பட்டுள்ளதாக, பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா அவர்கள் 2023 ஒக்தோபர் 06 ஆம் திகதி பாராளுமன்றத்தில் எழுப்பிய விடயங்கள், பாராளுமன்ற நிலையியற் கட்டளை 118 இன் ஏற்பாடுகளின் கீழ் ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படுமாக.

4.

கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி,— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

“வன்னி மண் அறக்கட்டளை நிறுவனத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்”

5.

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— சட்டமூலத்தை மீளப் பெறுவதற்கான அனுமதி,— இன்றைய தின பாராளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் 58 ஆம் விடயமாகக் காணப்படுகின்ற பின்வரும் சட்டமூலத்தை மீளப்பெறுவதற்கான அனுமதி வழங்கப்படுமாக :-

“மனித உரிமைகள் அமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம்”

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* அ1.

ஒதுக்கீடு சட்டமூலம் — (ஒதுக்கப்பட்ட பத்தொன்பதாம் நாள்) — குழு ஆய்நிலை (பரிசீலனை, டிசம்பர் 04)

*2.

சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் மற்றும் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சர்,— சுற்றுலாப் பயணத்துறைச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க சுற்றுலாப் பயணத்துறைச் சட்டத்தின் 26(1) ஆம் பிரிவின் கீழ் இலங்கை சுற்றுலாப் பயணத்துறை அபிவிருத்தி அதிகாரசபையின் பரிந்துரைகளுடன், சுற்றுலா அபிவிருத்தி பிரதேசங்களை பிரகடனப்படுத்துதல் தொடர்பில் சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சரால் விதிக்கப்பட்டு 2023 யூலை 26 ஆம் திகதிய 2342/26 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.11.14 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*3.

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்,— புத்தசாசன நிதியத்தின் வருடாந்த அறிக்கைகள் (2016 மற்றும் 2017),— 1990 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, புத்தசாசன நிதியச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் கீழ் 2023.03.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2016.12.31 மற்றும் 2017.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுகளுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய புத்தசாசன நிதியத்தின் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளுக்கான வருடாந்த அறிக்கைகள் அங்கீகரிக்கப்படுமாக.

(புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2023.05.23 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.07.18 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*4.

துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர், — வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானச் சேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின் வருடாந்த அறிக்கை (2022),— 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் 153 ஆம் பிரிவின் கீழ் 2023.08.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2022.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானச் சேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின் 2022 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(வலுசக்தி மற்றும் போக்குவரத்து பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2023.09.07 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.09.20 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*5.

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— செலசினே தொலைக்காட்சி நிறுவனத்தின் வருடாந்த அறிக்கை (2020),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் 2023.02.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2020.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய செலசினே தொலைக்காட்சி நிறுவனத்தின் 2020 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(வெகுசன ஊடக அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2023.03.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.03.24 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*6.

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— செலசினே தொலைக்காட்சி நிறுவனத்தின் வருடாந்த அறிக்கை (2019),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் 2023.01.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2019.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய செலசினே தொலைக்காட்சி நிறுவனத்தின் 2019 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(வெகுசன ஊடக அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2023.03.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.03.24 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*7.

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— இலங்கை பத்திரிகைப் பேரவையின் வருடாந்த அறிக்கையும் கணக்குக் கூற்றும் (2020),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் 2023.02.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2020.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை பத்திரிகைப் பேரவையின் 2020 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கையும் கணக்குக் கூற்றும் அங்கீகரிக்கப்படுமாக.

(வெகுசன ஊடக அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2023.03.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.03.24 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*8.

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— வரையறுக்கப்பட்ட சுயாதீன தொலைக்காட்சி சேவையின் அறிக்கை (2021),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் 2023.02.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2021.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய வரையறுக்கப்பட்ட சுயாதீன தொலைக்காட்சி சேவையின் 2021 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(வெகுசன ஊடக அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2023.03.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.03.24 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*9.

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— இலங்கை அச்சக நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை (2015),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் 2023.02.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2015.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை அச்சக நிறுவகத்தின் 2015 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(வெகுசன ஊடக அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2023.03.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.03.24 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*10.

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கை (2019),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் 2022.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2019.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் 2019 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(வெகுசன ஊடக அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2023.03.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.03.24 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*11.

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— தி அஸோசியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட்டின் வருடாந்த அறிக்கை (2020),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் 2022.10.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2020.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய தி அஸோசியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட்டின் 2020 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(வெகுசன ஊடக அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2023.03.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.03.24 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*12.

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கை (2019),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் 2022.11.10 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2019.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் 2019 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(வெகுசன ஊடக அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2023.03.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.03.24 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*13.

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— இலங்கை மன்றத்தின் வருடாந்த அறிக்கை (2021),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் 2023.07.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 202 1.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை மன்றத்தின் 2021 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(ஊடகம், இளைஞர், மரபுரிமை மற்றும் புதிய பிரஜைகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2023.10.03 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.10.18 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*14.

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— தி அஸோசியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட்டின் வருடாந்த அறிக்கை (2021),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் 2023.07.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2021.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய தி அஸோசியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட்டின் 2021 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(ஊடகம், இளைஞர், மரபுரிமை மற்றும் புதிய பிரஜைகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2023.10.03 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.10.18 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*15.

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கை (2020),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் 2023.08.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2020.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் 2020 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(ஊடகம், இளைஞர், மரபுரிமை மற்றும் புதிய பிரஜைகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2023.10.03 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.10.18 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*16.

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கை (2020),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் 2023.04.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2020.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் 2020 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(ஊடகம், இளைஞர், மரபுரிமை மற்றும் புதிய பிரஜைகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2023.06.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.07.06 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*17.

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கை (2015),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் 2023.04.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2015.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் 2015 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(ஊடகம், இளைஞர், மரபுரிமை மற்றும் புதிய பிரஜைகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2023.06.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.07.06 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*18.

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கை (2016),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் 2023.04.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2016.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் 2016 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(ஊடகம், இளைஞர், மரபுரிமை மற்றும் புதிய பிரஜைகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2023.06.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.07.06 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*19.

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கை (2017),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் 2023.04.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2017.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் 2017 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(ஊடகம், இளைஞர், மரபுரிமை மற்றும் புதிய பிரஜைகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2023.06.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.07.06 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*20.

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— இலங்கை அச்சக நிறுவனத்தின் வருடாந்த அறிக்கை (2016),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் 2023.04.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 201 6.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை அச்சக நிறுவனத்தின் 2016 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(ஊடகம், இளைஞர், மரபுரிமை மற்றும் புதிய பிரஜைகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2023.06.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.07.06 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*21.

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— இலங்கை அச்சக நிறுவனத்தின் வருடாந்த அறிக்கை (2017),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் 2023.04.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2017.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை அச்சக நிறுவனத்தின் 2017 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(ஊடகம், இளைஞர், மரபுரிமை மற்றும் புதிய பிரஜைகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2023.06.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.07.06 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*22.

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— இலங்கை அச்சக நிறுவனத்தின் வருடாந்த அறிக்கை (2018),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் 2023.04.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2018.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை அச்சக நிறுவனத்தின் 2018 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(ஊடகம், இளைஞர், மரபுரிமை மற்றும் புதிய பிரஜைகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2023.06.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.07.06 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*23.

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— இலங்கை அச்சக நிறுவனத்தின் வருடாந்த அறிக்கை (2019),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் 2023.04.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2019.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை அச்சக நிறுவனத்தின் 2019 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(ஊடகம், இளைஞர், மரபுரிமை மற்றும் புதிய பிரஜைகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2023.06.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.07.06 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*24.

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— இலங்கை அச்சக நிறுவனத்தின் வருடாந்த அறிக்கை (2020),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் 2023.04.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2020.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை அச்சக நிறுவனத்தின் 2020 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(ஊடகம், இளைஞர், மரபுரிமை மற்றும் புதிய பிரஜைகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2023.06.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.07.06 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*25.

கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— இலங்கை இறப்பர் ஆராய்ச்சி நிறுவனத்தின் வருடாந்த அறிக்கை (2021),— 1930 ஆம் ஆண்டின் (கடந்த ஆண்டு திருத்தம் செய்யப்பட்ட 2003 ஆம் ஆண்டின்) 10 ஆம் இலக்க, இறப்பர் ஆராய்ச்சி ஆணைச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் 2023.05.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2021.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை இறப்பர் ஆராய்ச்சி நிறுவனத்தின் 2021 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(பொருட்கள் மற்றும் சேவைகள் ஏற்றுமதியை அதிகரித்தல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2023.08.09 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.08.24 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*26.

கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— தென்னைப் பயிர்ச் செய்கைச் சபையின் வருடாந்த அறிக்கை (2020),— 1971 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, தென்னை அபிவிருத்திச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் 2023.06.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2020.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய தென்னைப் பயிர்ச் செய்கைச் சபையின் 2020 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(பொருட்கள் மற்றும் சேவைகள் ஏற்றுமதியை அதிகரித்தல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2023.08.09 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.08.24 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*27.

கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— கரும்பு ஆராய்ச்சி நிறுவனத்தின் வருடாந்த அறிக்கை (2019),— 1981 ஆம் ஆண்டின் 75 ஆம் இலக்க, கரும்பு ஆராய்ச்சி நிறுவனச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் கீழ் 2023.02.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2019.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய கரும்பு ஆராய்ச்சி நிறுவனத்தின் 2019 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(பெருந்தோட்டக் கைத்தொழில் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2023.06.08 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.07.05 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*28.

கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— தென்னை ஆராய்ச்சி நிறுவனத்தின் வருடாந்த அறிக்கை (2020),— 1971 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, தெங்கு அபிவிருத்திச் சட்டத்தின் 44 ஆம் பிரிவின் கீழ் 2023.02.10 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2020.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய தென்னை ஆராய்ச்சி நிறுவனத்தின் 2020 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(பெருந்தோட்டக் கைத்தொழில் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2023.06.08 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.07.05 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*29.

கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— தலவாக்கலை இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தின் வருடாந்த அறிக்கை (2019),— 1993 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, தேயிலை ஆராய்ச்சி நிறுவனச் சட்டத்தின் 16 ஆம் பிரிவின் கீழ் 2023.02.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2019.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய தலவாக்கலை இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தின் 2019 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(பெருந்தோட்டக் கைத்தொழில் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2023.06.08 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.07.05 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*30.

கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— தென்னை ஆராய்ச்சி நிறுவனத்தின் வருடாந்த அறிக்கை (2020),— 1971 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, தெங்கு அபிவிருத்திச் சட்டத்தின் III ஆம் பாகத்தின் 24 ஆம் பிரிவின் கீழ் 2023.03.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2020.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய தென்னை ஆராய்ச்சி நிறுவனத்தின் 2020 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(பெருந்தோட்டக் கைத்தொழில் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2023.06.08 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.07.05 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*31.

கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை (2021),— 1975 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் 2023.03.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2021.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகாரசபையின் 2021 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(பெருந்தோட்டக் கைத்தொழில் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2023.06.08 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.07.05 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*32.

கடற்றொழில் அமைச்சர்,— இலங்கை தேசிய நீர்வாழ் உயிரினச் செய்கை அபிவிருத்தி அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை (2020),— 1998 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க, இலங்கை தேசிய நீர்வாழ் உயிரினச் செய்கை அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் 2023.03.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2020.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை தேசிய நீர்வாழ் உயிரினச் செய்கை அபிவிருத்தி அதிகாரசபையின் 2020 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(உணவுப் பாதுகாப்பு மற்றும் கமத்தொழில் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2023.07.06 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.08.09 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*33.

வனசீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சர் மற்றும் நீர்ப்பாசன அமைச்சர்,— சென்ட்ரெல் இன்ஜினியரிங் சேர்விஸெஸ் (ப்ரைவட்) லிமிடட்டின் வருடாந்த அறிக்கை (2020),— 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் 166 ஆம் பிரிவின் கீழ் 2023.02.10 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2020.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய மத்திய பொறியியல் சேவைகள் தனியார் நிறுவனத்தின் 2020 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(நீர்ப்பாசன அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2023.04.25 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.05.26 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*34.

வனசீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சர் மற்றும் நீர்ப்பாசன அமைச்சர்,— இலங்கை மகாவலி அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை (2019),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14(I) ஆம் பிரிவின் கீழ் 2022.11.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2019.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை மகாவலி அதிகாரசபையின் 2019 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(நீர்ப்பாசன அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2023.04.25 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.05.26 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*35.

நீதிமன்றம், நியாயசபை அல்லது நிறுவனமொன்றை அவமதித்தல் சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2023 நவம்பர் 08) [1].

*36.

பிரிவிடல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*37.

சேர்பெறுமதி வரி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*38.

நிகழ்நிலைக் காப்பு சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*39.

நிதிச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*40.

தேசிய ஒற்றுமைக்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலகம் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*41.

தேசிய நீரளவை சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*42.

மத்தியஸ்தத்திலிருந்து விளைகின்ற சர்வதேச தீர்த்துவைத்தல் உடன்படிக்கைகளை ஏற்றங்கீகரித்தலும் மற்றும் வலுவுறுத்தலும் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*43.

மத்தியஸ்த சபை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*44.

விலங்கின நலம்பேணல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*45.

கப்பற்றொழில் முகவர்களுக்கு, சரக்கனுப்புநர்க்கு, கலன்செயற்படுத்தாப் பொதுக்காவுநர்க்கு மற்றும் கொள்கலன் செயற்படுத்துநர்க்கு உரிமமளித்தல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*46.

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்,— தொல்பொருளியல் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (188 ஆம் அத்தியாயமான) 1940 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க தொல்பொருளியல் கட்டளைச் சட்டத்தின் கீழ் 46 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 47(1) ஆம் பிரிவின் கீழ் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரால் 2023 மே 25 ஆம் திகதி ஆக்கப்பட்டதும் 2023.07.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*47.

நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்,— கூட்டிணைக்கப்பட்ட சட்டக்கல்விப் பேரவைக் கட்டளைச் சட்டத்தின் கீழ் விதிகள்,— (276 ஆம் அத்தியாயமான) கூட்டிணைக்கப்பட்ட சட்டக்கல்விப் பேரவைக் கட்டளைச் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் கீழ் நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு அமைச்சரின் ஒருமைப்பாட்டுடன் கூட்டிணைக்கப்பட்ட சட்டக்கல்விப் பேரவையினால் ஆக்கப்பட்டு, 2023 மே 15 ஆம் திகதிய 2332/02 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.07.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான விதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*48.

வனசீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சர் மற்றும் நீர்ப்பாசன அமைச்சர்,— இலங்கை மகாவலி அதிகாரச் சபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1979 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க இலங்கை மகாவலி அதிகாரச் சபைச் சட்டத்தின் 54(1) மற்றும் 54(2) ஆம் பிரிவுகளுடன் கீழ் நீர்ப்பாசன அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2023 ஆகஸ்ட் 14 ஆம் திகதிய 2345/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.11.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*49.

கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— இலங்கை தேயிலைச் சபைச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கை தேயிலைச் சபைச் சட்டத்தின் 13(1)(அ) மற்றும் 13(1)(ஆ) ஆம் பிரிவுகளின் கீழ் ஆய வரி தொடர்பில் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரால் விதிக்கப்பட்டு 2023 யூலை 04 ஆம் திகதிய 2339/07 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.11.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*50.

கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— பீடைகொல்லிகளைக் கட்டுப்படுத்தற் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1980 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க பீடைகொல்லிகளைக் கட்டுப்படுத்தற் சட்டத்தின் 20 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 26 ஆம் பிரிவின் கீழ் கமத்தொழில் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2023 ஆகஸ்ட் 18 ஆம் திகதிய 2345/74 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.11.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*51.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் தலைவர், அங்கத்தவர்கள் மற்றும் பணிப்பாளர் நாயகத்தின் ஊதியத்தினை தீர்மானித்தல்,— 2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, ஊழல் எதிர்ப்பு சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய நியமிக்கப்பட்ட இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் தலைவர், அங்கத்தவர்கள் மற்றும் பணிப்பாளர் நாயகத்தின் ஊதியமானது, அச் சட்டத்தின் 9 ஆம் மற்றும் 24 ஆம் பிரிவுகளுக்கு அமைய பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட வேண்டியதுடன் அது திரண்ட நிதியத்தினால் செலுத்தப்படுதலும் வேண்டுமென்பதாலும்;

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் அங்கத்தவர்களாக மூன்று பேர் நியமிக்கப்பட வேண்டியதுடன், அவ்வாறு நியமிக்கப்படும் நபர்கள் மேற்கூறப்பட்ட சட்டத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் அங்கத்தவராக பதவி வகிப்பதற்கு முன்னர் அவர்களினால் ஊதியம் பெறும் அனைத்துப் பதவிகளையும் கைவிட வேண்டியதுடன், ஆணைக்குழுவின் அங்கத்தவராக இருக்கும் வேளையில் ஏதேனும் வர்த்தக செயற்பாடுகளில் ஈடுபடுதல், ஏதேனும் தொழில் துறையில் ஈடுபடுதல் கூடாது என்பதாலும்;

சட்டத்தின் 19 ஆம் பிரிவின் பிரகாரம் பணிப்பாளர் நாயகமாக நியமிக்கப்படுபவர் அரச சேவையின் அனுவதித்தல் அடிப்படையில் நியமிக்கப்பட்டவர் அல்லாது இருப்பின் அவர் பணிப்பாளர் நாயகப் பதவியினை பொறுப்பேற்பதற்கு முன்னர் அனைத்து ஊதியம் பெறும் பதவிகளில் இருந்தும் விலக வேண்டுமென்பதாலும்;

இச் சட்டம் அமுல்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக் குழுவிற்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்புக்கள் விரிவடைவதனால் அவ் ஆணைக்குழுவின் தலைவர், அங்கத்தவர்கள் மற்றும் பணிப்பாளர் நாயகத்தின் பொறுப்புக்களும் அதிகரித்துள்ளன என்பதாலும்; அத்துடன்

அப் பதவிகளுக்கு நியமிக்கப்படுபவர் மேற்கூறப்பட்டவாறு வேறு ஊதியம் பெறும் பதவிகளில் இருந்து விலகுதல் மற்றும் வர்த்தக செயற்பாடுகளில் ஈடுபடுதல் அல்லது ஏதேனும் தொழில் துறையில் ஈடுபடுதல் கூடாது என்பதனால் மற்றும் அவர்களினால் மேற்கொள்ளவுள்ள விசேட பணிகளை கருத்திற் கொண்டு இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் தலைவர், அங்கத்தவர்கள் மற்றும் பணிப்பாளர் நாயகம் ஆகியோருக்கு, கீழே குறிப்பிடப்பட்டவாறு ஊதியம் செலுத்துவதற்கு අමප/23/2004/601/056 ஆம் இலக்க மற்றும் 2023 ஒக்டோபர் 23 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது:—

(i) தலைவருக்கு ரூபா. 500,000.00 உம், அங்கத்தவருக்கு ரூபா. 450,000.00 உம் மற்றும் பணிப்பாளர் நாயகத்திற்கு ரூபா 400,000.00 என்ற அடிப்படையில் மாதாந்த ஊதியத்தினை செலுத்துதல்;

அரச ஊழியர் ஒருவர் அனுவதித்தல் அடிப்படையில் பணிப்பாளர் நாயகமாக நியமிக்கப்படும் பட்சத்தில், ரூபா 400,000.00 ஊதியம் அல்லது அவ்வாறு நியமிக்கப்படுபவர் அரச ஊழியராக இறுதியாகப் பெற்று வந்த சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் (போக்குவரத்து மற்றும் தொடர்பாடல் சாதன கொடுப்பனவு தவிர) கூட்டுத் தொகைக்கு சமமான அடிப்படையில் ஊதியம் அல்லது இவை இரண்டில் பெறுமதி கூடிய ஊதியத்தினைப் பெற்றுக் கொள்வதற்கு உரிமை கிடைக்கின்றது.

(ii) தொடர்பாடல் சாதனக் கொடுப்பனவாக தலைவருக்கு ரூபா. 10,000.00 நிதியும், அங்கத்தவருக்கு ரூபா. 7,500.00 வீதம் மற்றும் பணிப்பாளர் நாயத்திற்கு ரூபா. 7,500.00 வீதம் செலுத்துதல்.

(iii) போக்குவரத்துக் கொடுப்பனவு கீழ் குறிப்பிடப்பட்டவாறு செலுத்துதல்.

| | எரிபொருள் கொடுப்பனவு | போக்குவரத்து கொடுப்பனவு ** | சாரதிக் கொடுப்பனவு ** |
|---|---|---|---|
| தலைவர் | 225 லீற்றர் | ரூபா. 50,000.00 | ரூபா. 25,000.00 |
| அங்கத்தவர்கள் | 200 லீற்றர் | ரூபா. 50,000.00 | ரூபா. 25,000.00 |
| பணிப்பாளர் நாயகம் | 200 லீற்றர் | ரூபா. 50,000.00 | ரூபா. 25,000.00 |

** அரசாங்கத்தினால் சாரதியுடன் உத்தியோகபூர்வ வாகனத்தினை வழங்க முடியாத சந்தர்ப்பங்களில் மாத்திரம் போக்குவரத்து கொடுப்பனவு மற்றும் சாரதிக் கொடுப்பனவினை பெற்றுக் கொள்ள உரிமை கிடைக்கின்றது.

இதற்கமைய, 2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் 9 ஆம் மற்றும் 24 ஆம் பிரிவுகளின் பிரகாரம், இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்யும் ஆணைக்குழுவின் தலைவர், அங்கத்தவர்கள் மற்றும் பணிப்பாளர் நாயகம் ஆகியோருக்கு மேற்குறிப்பிடப்பட்டவாறு ஊதியம் மற்றும் கொடுப்பனவுகள் செலுத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

*52.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 1),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1), 6 மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2023 ஒக்டோபர் 09 ஆம் திகதிய 2353/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.11.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*53.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 2),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2023 மார்ச் 24 ஆம் திகதிய 2324/45 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.04.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*54.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 3),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2022 செப்டெம்பர் 09 ஆம் திகதிய 2296/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.10.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

55.

சர்வதேச லயன்ஸ் கழகம் மாவட்டம் 306ஏ-தேசிய அபிவிருத்தி மன்ற நம்பிக்கை நிதியம் (கூட்டிணைத்தல்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

56.

புகையிலை வரி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

57.

ரொசான் ரணசிங்க ஜனசஹன மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

58.

மனித உரிமைகள் அமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

59.

சிவில் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

60.

சமாதானம், கல்வி வலுவூட்டல் மற்றும் அபிவிருத்தியிற்கான விளையாட்டு நிறுவகம் (SPEED) (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

61.

அவசரகால பொதுச் சுகாதாரச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

62.

இலங்கை காப்புறுதி நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

63.

விவாக (பொது) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

64.

முஸ்லிம் திருமணம், மணநீக்கம் (நீக்கம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

65.

இலங்கை பிளாஸ்டிக் மற்றும் இறப்பர் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

66.

திருமணப் பதிவு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

67.

திருமணத்திற்கான ஆகக்குறைந்த வயது சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

68.

தொழில் வல்லுனர்களின் சமூக சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

69.

இலங்கை பட்டயக் கப்பல்தரகர்கள் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

70.

தண்டனைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

71.

தெதிகம ஸ்ரீ மைத்திரீ பிரக்ஞார்த்த பௌத்த கல்வி தஹம் சபாவ (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

72.

சத்திய ஸ்ரீ கணபதி பக்தி ஜன சேவா மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

73.

இலங்கை சித்த உளவியல்சார் உயர் கற்கைநெறி திறந்த நிறுவனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

## தினப்பணிகள் மீதான திருத்தங்கள் பற்றிய முன்னறிவித்தல்

அ1.

"ஒதுக்கீடு" எனும் சட்டமூலத்திற்குக் குழு ஆய்நிலையில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் திருத்தங்களைத் "தினப்பணிக்கான அனுபந்தம்" எனும் தனியிதழிற் பார்க்க.

[1] ''சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக'' எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.